பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 03 வள்ளுவர் ஆண்டு 2053 ஆவணி 23 வியாழக்கிழமை 08.09.2022 கதிர் 194

## கொழும்பில் மோதல்; ஆண் ஒருவர் மரணம்

### பெண் ஒருவர் படுகாயம்

கொழும்பு - வாழைத்தோட்டம் பகுதியில் நேற்றிரவு சிலரிடையே ஏற்பட்ட மோதலின்போது ஆயுதங்களால் தாக்கப்பட்டதில் ஆண் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் பெண் ஒருவர் படுகாயமடைந்துள்ளார் என்று ☞8



# 37 இராஜாங்க அமைச்சர்கள் பதவியேற்பு

- ராஜபக்ஷ குடும்பத்தில் ஷசீந்திரவுக்குக் கிடைத்தது நீர்ப்பாசனம்
- தமிழர்களில் பிள்ளையான், வியாழேந்திரன், அரவிந்தகுமார், சுரேன் ராகவன் சத்தியப்பிரமாணம்
- முஸ்லிம்களில் காதர் மஸ்தானுக்கு மாத்திரமே அதிர்ஷ்டம்
- பெண்களில் சீதா, கீதா, டயனாவுக்குப் பதவிகள்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசில் புதிய இராஜாங்க அமைச்சர்களாக 37 பேர் இன்று பதவியேற்றனர். இன்று முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில், ஜனாதிபதி முன்னிலையில் இவர்கள் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டனர். ☞2

### படையினரால் படுகொலை செய்யப்பட்ட

## மாணவி கிருஷாந்திக்கு நாடாளுமன்றில் அஞ்சலி

இராணுவத்தால் யாழ்ப்பாணம் - செம்மணியில் வைத்து கூட்டுப் பாலியல் வன்புணர்வுக்குட்படுத்தப்பட்டு கொடூரமான முறையில் படுகொலை செய்யப்பட்ட சுண்டிக்குளி மகளிர் கல்லூரி உயர்தர மாணவி கிருஷாந்தி ☞8

## மட்டு. ஊடகவியலாளர்கள் மீது ரி.ஐ.டி. தொடர்ந்து விசாரணை



மட்டக்களப்பு மாவட்ட தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின்தலைவரும் சுயாதீன ஊடகவியலாளருமான வாலசிங்கம் கிருஷ்ணகுமாரைகொழும்பில் உள்ள பயங்கரவாதத் தடுப்பு மற்றும் விசாரணைப் பிரிவுக்கு ☞8

## கைதான நடிகை தமித்தா 14 வரை விளக்கமறியலில்



அரசுக்கு எதிரான போராட்டச் செயற்பாட்டாளரும் நடிகையுமான தமித்தா அபேரத்ன விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இவரை இன்று கோட்டை நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்திய பின்னர் எதிர்வரும் 14 ஆம் திகதி விளக்கமறியலில் வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ☞8

### வவுனியா மாவட்டத்தில்

## போதை ஊசிப் பயன்பாட்டுக்கு அடிமையாகிவரும் மாணவர்கள்



வவுனியாவில் அண்மைக் காலமாகப் போதை ஊசிப் பயன்பாடு பாடசாலை செல்லும் மாணவர்கள் மத்தியில் அதிகரித்துக் காணப்படுகின்றது. ☞8

## தமிழருக்கு நிரந்தர தீர்வு வேண்டும்!

### சாணக்கியன் எம்.பி. வலியுறுத்து



தமிழ் மக்கள் எதிர்கொண்டுள்ள அடிப்படைப் பிரச்சினைகளுக்கும், நீண்டகாலக் கோரிக்கைகளுக்கும் நிலையான தீர்வை அரசு வழங்க வேண்டும் - என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் வலியுறுத்தினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றியபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய சாணக்கியன் எம்.பி., இளம் தரப்பினர் கிரிக்கெட் விளையாட்டை சிறந்த முறையில் முன்னோக்கிக் கொண்டு செல்கின்றார்கள். ஆசியக் கிண்ணக் கிரிக்கெட் போட்டியில் வெற்றி பெற்ற இலங்கை அணிக்கு வாழ்த்தைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அதேவேளை, அரசியலையும் இளம் தரப்பினரிடம் ஒப்படைக்குமாறு நாட்டு மக்களிடம் மீண்டும் வலியுறுத்துகின்றேன். மந்த போசணை தொடர்பான சபை ஒத்திவைப்பு விவாதத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தின் நிலைமை தொடர்பில் அவதானம் செலுத்தவுள்ளேன்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் 5 வயதுக்குக் குறைவான 55 ஆயிரம் பிள்ளைகள் உள்ளார்கள். இந்த எண்ணிக்கையில் 10 சதவீதமானோர் ☞2

## நாமலை அழைத்த பிள்ளையான் மட்டு. மாவட்டத்துக்குச் சாபக்கேடு

### சபையில் போட்டுத்தாக்கிய சாணக்கியன்



நாடாளுமன்ற உறுப்பினர் சிவநேசத்துரை சந்திரகாந்தன் (பிள்ளையான்) மட்டக்களப்பு மாவட்டத்துக்குச் சாபக்கேடு - என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்தார். நாடாளுமன்றத்தில் நேற்று ☞2

## சரத்வீரசேகர இனவெறியர்

### கஜேந்திரன் பதிலடி



மக்களுக்கும் சிறுவர்களுக்கும்தான் போக்குப் பிரச்சினை. ஆனால், ☞2

## இது சிங்கள பௌத்த நாடு!

### குருந்தூர் மலையில் இந்து ஆலயம் இருக்கவில்லை; கூட்டமைப்பினருக்கு வீரசேகர பகிரங்க எச்சரிக்கை



இது சிங்கள பௌத்த நாடு என்பதைஅனைவரும்ஏற்றுக்கொள்ள வேண்டும். இங்கு பழைய தூபிகளைப் பராமரிக்க எவருடைய அனுமதியையும் பெற்றுக் கொள்ள வேண்டிய அவசியம் கிடையாது என்று தெரிவித்துள்ள முன்னாள் அமைச்சர் சரத் வீரசேகர, வேறுநாட்டில்என்றால்பெரும்பான்மையான மதமொன்றுக்கு வேறு மதத்தைச் சேர்ந்த ஒருவர் இடையூறு ஏற்படுத்தினால் அதற்கு மறுநாள் அவர் காணாமல்போயிருப்பார் என்று மறைமுக எச்சரிக்கையும் விடுத்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற சிறுவர் மற்றும் தாய்மார்களின் ☞2

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



## தமிழருக்கு.......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மந்தபோசணை அல்லது ஊட்டச்சத்துக் குறைபாட்டால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று வைத்திய அதிகாரிகள் அறிக்கையிட்டுள்ளனர்.

அதற்கு மேலதிகமாக 11 ஆயிரம் கர்ப்பிணித் தாய்மார்கள் உள்ளார்கள். கடந்த ஆண்டு நவம்பர் மாதம் நூற்றுக்கு 10 சதவீதமாகக் காணப்பட்ட மந்த போசணை அல்லது ஊட்டச்சத்து குறைபாடு 2022ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதமளவில் 17 சதவீதமாக உயர்வடைந்துள்ளது.

எமது மாவட்டத்தைப் பொறுத்தவரை கர்ப்பிணித் தாய்மாரின் உரிய காலத்துக்குத் தேவையான நிறை குறைவடைந்துள்ளது என மாவட்ட சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

போசணை குறைபாடு உள்ள பிள்ளைகளுக்கு வழங்கும் பகல் உணவுக்காக 30 ரூபா ஒதுக்கப்பட்டது. தற்போது அந்தத் தொகை 60 ரூபாவாக மாணவர்களுக்குப் பகல் உணவு முறையாகக் கிடைக்கப்பெறுவதில்லை.

நாட்டின் பொருளாதாரத்தை முழுமையாக இல்லாதொழித்து நாட்டு மக்களை மந்தபோசணைக்குக் கொண்டு சென்ற தரப்பினர் தற்போது புதிய அரசியல் நாடகத்தை அரங்கேற்றியுள்ளனர்.

பொருளாதார நெருக்கடிக்குப் பொறுப்புக் கூற வேண்டியவர்கள் தற்போது மேலவை இலங்கை கூட்டணி என்ற புதிய கூட்டணியை உருவாக்கியுள்ளார்கள்.

லீ குவான் யூ சிங்களே எனக் குறிப்பிட்டவர்கள், வைத்தியர் ஷாபி தொடர்பில் பொய்யான குற்றச்சாட்டுக்களை முன்வைத்தவர்கள் தற்போது புதிய அரசியல் நாடகத்தை அரங்கேற்றியுள்ளார்கள்.

நாட்டு மக்கள் இவர்களிடம் ஏமாறக் கூடாது. பொருளாதார நெருக்கடிக்கு ராஜபக்சர்கள் மாத்திரமல்ல இவர்களும் பொறுப்புக்கூற வேண்டும்.

முன்னாள் ஜனாதிபதி கோட்டபய ராஜபக்ச நாட்டுக்கு மீள வந்துள்ளமை ஒரு வழியில் நல்லது. இல்லாவிடின் மஹிந்த சுழங்கவைப் போல் கோட்டா சுழங்கவையும் ஆரம்பித்திருப்பார்கள். தற்போதைய நிலையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவதானத்துடன் இருக்க வேண்டும்.

மந்த போசனைக்குள்ளாகியுள்ள பிள்ளைகளுக்கு உணவளிக்க முடியாத நிலையில் உள்ள போது தீக்கிரையாகிய வீடுகளுக்கான நட்டஈட்டை அரசியல் வாதிகள் இரட்டிப்பாக்கியுள்ளார்கள்.

தமிழ் மக்கள் எதிர்கொண்டுள்ள அடிப்படைப் பிரச்சினைகளுக்கும், நீண்ட காலக் கோரிக்கைகளுக்கும் நிலையான தீர்வை அரசு வழங்க வேண்டும். கடந்த நாட்களில் வெளிநாட்டுக்குத் தனிப்பட்ட பயணத்தை மேற்கொண்டு அந்நாடுகளின் அரசியல் தரப்பினர், புலம்பெயர் இலங்கையர்களுடன் சந்திப்பில் ஈடுப்பட்டேன்.

முன்னேற்றமடைந்துள்ள நாடுகள் அதிகாரத்தைப் பகிர்ந்தளித்துள்ளன. புலம்பெயர் அமைப்புக்களின் முதலீடுகளைப் பெற்றுக்கொள்ள வேண்டுமாயின் அதிகாரப் பகிர்வு அவசியமானது.

எதிர்வரும் காலங்களில் வெளிநாடுகளில் அரசியலில் தொடர்புமில்லாமல் உள்ள இரண்டாம் தரப்பினருடன் ஒன்றிணைந்து இலங்கைக்கான ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள்ள உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

காணி விடுவிப்பு, அரசியல் கைதிகள் விடுதலை, அதிகாரப்பகிர்வு ஆகியவற்றுக்குத் தீர்வு அவசியமாகும் - என்றார்.

## 37 இராஜாங்க......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதன்படி இன்று பதவியேற்ற 37 இராஜாங்க அமைச்சர்களின் விபரம் வருமாறு:-

01. ஜகத் புஷ்பகுமார - வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு
02. ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய - நிதி
03. லசந்த அழகியவண்ண - போக்குவரத்து
04. திலும் அமுனுகம - முதலீட்டு ஊக்குவிப்பு
05. கனக ஹேரத் - தொழில்நுட்பம்
06. ஜனக்க வக்கும்புர - மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி
07. ஹொன் சேமசிங்க - நிதி
08. மொஹான் பிரியதர்சன டி சில்வா - விவசாயம்
09. தேனுக விதானகமகே - நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு
10. பிரமித்தபண்டாரதென்னக்கோன் - பாதுகாப்பு
11. ரோஹண திசாநாயக்க - விளையாட்டு மற்றும் இளைஞர் விவகாரம்
12. அருந்திக்க பெர்னாண்டோ - நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு
13. விஜித்த பேருகொட - பிரிவேனா கல்வி
14. லொஹான் ரத்வத்தை - பெருந்தோட்டக் கைத்தொழில்
15. தாரக பாலசூரிய - வெளிவிவகாரம்
16. இந்திக்க அனுருத்த - மின்வலு, எரிசக்தி
17. சனத் நிசாந்த - நீர் வழங்கல்
18. சிறிபாலகம்லத் - நெடுஞ்சாலைகள்
19. சாந்த பண்டார - வெகுஜன ஊடகம்
20. அநுராத ஜெயரத்ன - நீதி மற்றும் சிறைச்சாலை மறுசீரமைப்பு
21. சதாசிவம் வியாழேந்திரன் - வர்த்தக, வாணிபம்
22. சிசிர ஜெயக்கொடி - சுதேச மருத்துவம்
23. பியல் நிசாந்த டி சில்வா - மீன்பிடி
24. பிரசன்ன ரணவீர - சிறு மற்றும் மத்திய தொழில் முயற்சி
25. டீ.வி சானக்க - வனஜீவராசிகள், வனவளப் பாதுகாப்பு
26. டீ.பி. ஹேரத் - கால்நடை அபிவிருத்தி
27. சீந்திர ராஜபக்ஷ - நீர்ப்பாசனம்
28. மருத்துவர் சீதா அரம்பேபொல - சுகாதாரம்
29. காதர் மஸ்தான் - கிராமிய பொருளாதாரம்
30. அசோக்க பிரியந்த - உள்நாட்டலுவல்கள்
31. அரவிந்த குமார் - கல்வி
32. கீதா குமாரசிங்க - மகளிர் மற்றும் சிறுவர் விவகாரம்
33. சிவநேசத்துரை சந்திரகாந்தன் - கிராமிய வீதி அபிவிருத்தி
34. கலாநிதி சுரேன் ராகவன் - உயர் கல்வி
35. டயனா கமகே - சுற்றுலாத்துறை
36. சாமர சம்பத் தஸநாயக்க - ஆரம்பக் கைத்தொழில்
37. அனுப பியும் பஸ்குவால் - சமூக வலுவூட்டல்

## நாமலை...........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உரையாற்றியபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய சாணக்கியன் எம்.பி.,

மட்டக்களப்பு மாவட்டத்தில் பல பிரச்சினைகள் காணப்படுகின்றன. பாடசாலைகளும் இராணுவம் வசமுள்ளது. இதேவேளை, அம்பாறை மாவட்டத்தில் கல்முனை வடக்கு பிரதேச செயலகம் தொடர்பில் பிரச்சினை தோற்றம் பெற்றுள்ளது.

இவ்வாறான நிலையில் தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் தலைவர் சிவநேசத்துரை சந்திரகாந்தன் தனது கட்சி மாநாட்டுக்கு முன்னாள் அமைச்சர் நாமல் ராஜபக்சவை மட்டக்களப்புக்கு அழைத்து வரவேற்பளித்துள்ளார். தனது சொந்த மாவட்டத்துக்குச் செல்ல முடியாத நிலையில் நாமல் ராஜபக்ச உள்ளார். அவ்வாறிருக்கையில் நாமல் ராஜபக்சவை மேடையில் ஏற்றி மட்டக்களப்பு மாவட்ட மக்களைத் தரம் குறைத்துள்ள சந்திரகாந்தனைச் சபையில் வன்மையாகக் கண்டிக்கின்றேன்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இல்லாமல் இருந்திருந்தால் அம்பாறை மாவட்டத்துக்கு ஒரு தமிழ் பிரதிநிதித்துவம் கூடக் கிடைத்திருக்காது.

கல்முனை பிரதேச செயலகப் பிரிவு குறித்து விரிவுபடுத்தப்பட்ட பேச்சை முன்னெடுப்போம் - என்றார்.

## இது சிங்கள.......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மந்தபோசணை தொடர்பில் யுனிசெப் வெளியிட்டுள்ள அறிக்கை தொடர்பான சபை ஒத்திவைப்பு வேளை இரண்டாம் நாள் விவாதத்தில் உரையாற்றும்போதே சரத்வீரசேகர இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

ஒகஸ்ட் 31 ஆம் திகதியன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற ஒருவர் முல்லைத்தீவு குருந்தூர் மலை விகாரையின் விகாராதிபதி சட்டவிரோத நிர்மாணத்தை மேற்கொள்கின்றார் என்று தெரிவித்து பொய்யான தகவலை நாடாளுமன்றத்துக்கு அறிவித்து, நாடாளுமன்றத்தையும் மக்களையும் தவறாக வழிநடத்த முயற்சித்துள்ளார்.

தொல்பொருள் அகழ்வுப் பணிகளை நிறுத்துவதற்கான தீய எண்ணத்துடனேயே அவர் அவ்வாறு கூறியுள்ளார்.

முல்லைத்தீவு நீதிவான் அந்த நிர்மாணத்தை நிறுத்துவதற்கு உத்தரவு வழங்கியிருந்தார். அதன் பின்னர் பொலிஸார் நகர்த்தல் பத்திரமொன்று மூலம் சட்டமா அதிபர் திணைக்களத்தின் சட்டத்தரணிகளுடன் அந்த இடத்துக்குச் சென்று அவதானித்து அந்த வழக்கை நீக்கிக்கொண்டுள்ளனர்.

இதன்படி தொல்லியல் திணைக்களத்துக்கு அதனைப் பராமரிக்கும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதன்படியே நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன.

குருந்தூர் அசோக விகாரை என்பது 2 ஆயிரம் வருடங்கள் வரையில் பழமையான பௌத்த விகாரை தொகுதியாகும். தீபவம்சம் மற்றும் மகாவம்சத்துக்கு அமைய குருந்தூர் மலை உண்மைக்கதையை எழுதிய வரலாற்று இடமாகும்.

அங்கு அகழ்வுகளின்போது புத்தர் சிலைகள் உள்ளிட்டவை மீட்கப்பட்டுள்ளன. ஆனால், அங்கு எந்த இடத்திலும் இந்து ஆலயம் இருந்தமைக்கான சாட்சியம் இல்லை. இதனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் அன்று நடந்த சம்பவத்துக்கு வெட்கப்பட வேண்டும்.

இங்கு புனித சின்னங்களை பிரதிஷ்டை செய்யும் நிகழ்வு ஜூன் 12 ஆம் திகதி நடைபெற்றது. அதில் பௌத்த பீடங்களின் நாயக்க தேரர்கள் உள்ளிட்டோர் கலந்துகொண்டிருந்தனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த சிலர் குண்டர் குழுக்களுடன் சென்று அதைக் குழப்பினர். மலர் ஒன்றை வைத்துக்கூட பூஜை செய்ய முடியாத வகையில் பிக்குகள் திரும்பியிருந்தனர்.

இந்த பௌத்த நாட்டில் பௌத்த சாசனத்தை அவமதிக்கும் வேலையைச் செய்தும், பௌத்தர்கள் அமைதியாகப் பார்த்துக்கொண்டிருப்பதை மௌனித்திருப்பதாகக் கருத வேண்டாம் என்று அன்று நான் நாடாளுமன்றத்தில் கூறினேன்.

அன்று விடுதலைப்புலிகள் மக்களையும், அரந்தலாவ பிக்குகள் உள்ளிட்டவர்களையும் கொலை செய்யும் போதும் கொழும்பில் இந்து ஆலயங்களில் திருவிழாக்கள் நடந்தன. பௌத்தர்கள் எந்தத் தடைகளையும் ஏற்படுத்தவில்லை. அதனால் நீங்கள் செய்யும் வேலையால் அனைத்து தமிழ் மக்களுக்கும் அவமானத்தையே கொண்டுவந்துள்ளது. இது பௌத்த நாடாகும். சிங்கள பௌத்த நாடு என்பதை அனைவரும் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

மேற்குலக நாடொன்றின் தூதுவர் ஒருவர், ஏன் சிங்கள பௌத்த நாடு என்று கூறுகின்றீர்கள் என்று, ஒருவரிடம் கேட்டுள்ளார். நீங்கள் தேவேந்திர முனையில் இருந்து காங்கேசன் துறைக்கு உலங்குவானூர்தியில் போகும்போது தெரியும் விகாரைகள் ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்னர் அமைக்கப்பட்டுள்ளமையாலேயே அவ்வாறு கூறுகின்றோம் என்று தூதுவருக்கு அவர் விளக்கமளித்துள்ளார்.

இங்கு பழைய தூபிகளைப் பராமரிக்க எவருடைய அனுமதியைப் பெற்றுக்கொள்ளும் அவசியமில்லை.

அது தொல் பொருள் திணைக்களத்தின் பணியாகும். இந்து ஆலயங்கள், முஸ்லிம் பள்ளிகள் இந்த நாட்டில் அமைக்கப்படுகின்றன. அதற்கு பௌத்தர்கள் ஒருபோதும் எதிர்ப்பு வெளியிடுவதில்லை.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அந்த நாடாளுமன்ற உறுப்பினர் வடக்கில் பௌத்த விகாரைகளை அமைக்க வேண்டாம் என்று கோங்களை எழுப்பிவிட்டு கொழும்புக்கு வந்து மீண்டும் வடக்குக்குப் போவதானது இது பௌத்த நாடு என்பதனாலேயே என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

வேறு நாட்டில் பெரும்பான்மையான மதமொன்றுக்கு வேறு மதத்தைச் சேர்ந்த ஒருவர் இடையூறு ஏற்படுத்தினால் அதற்கு மறுநாள் அவர் காணாமல்போயிருப்பார். குருந்தூர் விகாரை பராமரிப்புக்காக இடைவிடாது செய்யும் இடையூறுகளை நிறுத்த வேண்டும் என்று நாங்கள் மிகவும் விநயமாக அவர்களிடம் கேட்கின்றோம். இந்தப் பராமரிப்புப் பணிகளை தொல்பொருள் திணைக்களம் நிறுத்தாது முன்னெடுத்துச் செல்லும். அது நிறுத்தப் படாது.

இதேவேளை, இந்த நடவடிக்கைகளால் இனச் சுத்திகரிப்பு செயற்பாடு நடக்கும் என்று அந்த நாடாளுமன்ற உறுப்பினர் கூறியுள்ளார். யாழ்ப்பாணத்தில் 25 ஆயிரம் வரையிலான சிங்களக் குடும்பங்கள் இருந்தன. இப்போது எத்தனை பேர் இருக்கின்றனர். அங்கு இப்போது எவ்வளவு முஸ்லிம் குடும்பங்கள் இருக்கின்றன? உண்மையில் இனச் சுத்திகரிப்பு நடந்திருந்தால் சிங்களம் மற்றும் முஸ்லிம்களுக்கு எதிராகவே நடந்திருக்கும்.

இந்த நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குச் சரியான பாதைகளைக் காட்டுங்கள், இல்லாவிட்டால் இவர்களை விரட்டியடிங்கள் என்று நான் தமிழ் மக்களிடம் கேட்டுக்கொள்கின்றேன் - என்றார்.

## சரத் வீரசேகர.......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இங்குள்ள சிங்கள நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குக் கொழுப்புப் பிரச்சினை.

- இவ்வாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச்செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வராசா கஜேந்திரன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற பிள்ளைகள், தாய்மாரின் மந்த போசணை தொடர்பாக யுனிசெப் நிறுவனம் விடுத்திருக்கும் அறிக்கை மீதான சபை ஒத்திவைப்பு வேளை இரண்டாவது நாள் விவாதத்தில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தென்பகுதியில் உள்ளவர்களை விடவும் போக்கற்ற நிலைமை தொடர்பில் நாம் நன்கு அறிவோம். நாம் அதற்குள் வாழ்ந்தவர்கள். அதனால் இப்போதும் பாதிக்கப்பட்டுள்ளவர்கள். இப்போது நீங்கள் இது தொடர்பில் பேசுவதில் மகிழ்ச்சி.

போக்கற்ற நிலையால் மக்களும் சிறுவர்களும்தான் பாதிக்கப்பட்டுள்ளார்கள். ஆனால், இங்குள்ள சிங்கள நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு கொழுப்புப் பிரச்சினை. அதனால் அவர்கள் தனியார் மருத்துவமனைகளில் சிகிச்சை பெறுகின்றனர். பலர் இங்கு இனவாதம் பேசுகின்றனர்.

நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர ஓர் இனவெறியர். அவர் விவாதத்துக்குரிய தலைப்பில் பேசாது குருந்தூர் மலை தொடர்பில் பேசும்போது மௌனிகளாக இருந்த சில,ர் நான் அந்த விடயம் தொடர்பில் பேசும்போது விவாதத்தின் தலைப்புக்கு முரணாகப் பேசுவதாகக் கூறுகின்றனர்.

குருந்தூர் மலை விடயத்தில் நாம் விட்டுக்கொடுக்க மாட்டோம். எமது உயிரைக்கொடுத்தாவது ஆக்கிரமிப்பைத் தடுப்போம் - என்றார்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## இயலாத அரசு இது

வரலாற்றில் முன்னபோதும் இல்லாத விதத்தில் பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டிருக்கும் இலங்கை நாடு, அதிலிருந்து மீளும் சாத்தியம் தென்படுவதாகத் தெரியவில்லை.

இந்த நெருக்குவாரங்களுக்கு மத்தியில் ரணில் விக்கிரமசிங்க புதிய ஜனாதிபதியாகப் பதவியேற்ற போது ஏதேனும் மாற்றம் வரும் என்ற ஒரு நம்பிக் கைக் கீற்று தென்படத்தான் செய்தது.

'புதுத் தும்புக்கட்டை நன்றாகக் கூட்டும்' என்பதற்கு இணங்க ரணில் விக்கிரமசிங்கவின் ஆரம்ப நடவடிக்கைகள் அமைந்தன என்பதும் வாஸ் தவம்தான்.

நாட்டின் வீண் செலவினங்களைக் குறைத்து, அத்தியாவசிய சேவைகளுக்கு மட்டும் முன்னுரிமை கொடுத்து, நாட்டின் பொருளாதாரத்தை நிமிர்த்திப் போகின்றவர் மாதிரி அவர் நாட்டுக்கு அழைப்பு விடுத்தார்.

அரசு நிர்வாகத்தின் வீண் டாம்பீகச் செலவுகளில் பிரதானமானது அரசியல் தலைவர்களுக்கான செலவினங்கள்தான். அதுவும் அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள் என்று ஒவ்வொருவருக்கும் செலவு செய்வது பல கோடி ரூபாநிதி. ஆளணி, அம்பு, வாகனத்தொடரணி, அலுவலகம், சம்பளங்கள் என்று ஒவ்வொரு அமைச்சருக்கும் கொட்டிச் செலவு செய்வது வீண் விரயம் என்பது எல்லோருக்கும் தெரியும்.

தாம் பதவியேற்ற போது இவற்றையெல்லாம் வெட்டிக் குறைப்பேன் என்றார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க. ஆனாலும் தாமும் வழமையான அரசியல் தலைவன்தான் என்பதை இப்போது சொல்லாலும் செயலாலும் நிரூபித்தி நிற்கின்றார் அவர்.

இன்று மட்டும் 37 இராஜாங்க அமைச்சர்கள் பதவி ஏற்றுள்ளனர். பட்டியலில் இன்னும் எத்தனை மிச்சம் இருக்கின்றதோ தெரியவில்லை.

இந்தக் கணக்கின்படி பார்த்தால் போகின்ற போக்கில், மொத்த அமைச்சர்களின் எண்ணிக்கை எழுபத்தியைந்தை எட்டும் என்பது திண்ணம்.

அதாவது மூன்றில் ஒரு பகுதி நாடாளுமன்ற உறுப்பினர்கள் அமைச்சர்களாகி விடுவர்.

பிறகென்ன? சர்வதேச நாணய நிதியத்திடம் கெஞ்சிக் கூத்தாடி கடன் வாங்கும் தொகையில் கணிசமானதை அமைச்சர்கள், அமைச்சுகளின் நிர்வாகத்திற்குச் செலவழித்து ஏப்பமிட வேண் டியதுதான்.

அமைச்சர்களின் எண்ணிக்கையைக் கூட்டுவது வெள்ளை யானையைக் கட்டித் தீனி போடுவதற்கு ஒப்பாகும்.

நெருக்கடி கால சிக்கலில் இருந்து நாட்டை மீட்பதற்கான தூர சிந்தையும், தீர்க்கதரிசனப் பார்வையும், உறுதியான கொள்கைப் பற்றும், உருப்படியான திட்டங்களும் இந்த அரசு தலைமை யிடம் இல்லை என்பது, இப்படி அரசியல் அழுத் தங்களுக்கு இடமளித்து அதிக எண்ணிக்கையில் இராஜாங்க அமைச்சர்கள் மற்றும் அமைச்சர்களை நியமிக்கும் ரணில் அரசுத் தலைமையின் போக்கு எடுத்துக்காட்டுகின்றது.

அரசியல் கட்டாயங்களுக்காக இப்படியான விடயங்களில் எல்லாம் வளைந்து, நெளிந்து, மடங்கிப் போகும் அரசினால் பொருளாதார சீர்தி ருத்தம் என்ற நெருக்கடியான பாதையில் உறுதி யாக நாட்டை வழி நடத்திச் செல்ல இயலாது என் பதுதான் பெறுபேறாக அமையும்.

ஆக, பொருளாதார மீளெழுச்சியை இன்று இந்த அரசுத் தலைமையிடம் இருந்து எதிர்பார்ப்பதில் அர்த்தமில்லை என்பதைத்தான் இந்த நியமனங் கள் நிரூபித்து நிற்கின்றன.

# தமிழ் அரசியல் கைதிகள் விவகாரம் தொடர்பாக தமிழ்ப் பிரதிநிதிகளுக்கும் அக்கறை வேண்டும்!

## குரலற்றவர்களின் குரல் அமைப்பு கோரிக்கை




மகசின் சிறைச்சாலையில் உண்ணா விரதம் இருக்கும் கைதிகளை நேரடியாக சென்றுபார்வையிட்டு அவர்களது நிலைவரம் தொடர்பாக அரசியல் கைதிகளது பெற்றோர் களுக்கு தெரியப்படுத்த வேண்டும் என தமிழ்த் தேசிய நாடாளுமன்ற உறுப்பினர் களையும், மனிதநேயத்தோடு செயற்படக் கூடிய அனைவரையும் கேட்டுக்கொள்கின் றோம் என குரலற்றவர்களின் குரல் அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் முரு கையா கோமகன் தெரிவித்தார்.

யாழ். ஊடக அமையத்தில் ம நடத்திய ஊடக சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

இதன்போது மேலும் அவர் தெரிவிக் கையில்–

நீண்ட காலமாக அரசியல்கைதிகளின் விடுதலை தொடர்பாக பேசப்பட்டு வரும் நிலையில், அண்மைக் காலங்களில் கைது செய்யப்பட்டு சிறைகளில் தடுத்து வைக் கப்பட்டிருக்கின்ற தமிழ் இளைஞர்கள் புதன் கிழமை கொழும்பு மகசின் சிறைச்சாலையில் உணவுத் தவிர்ப்புப் போராட்டத்தை ஆரம் பித்து இருக்கின்றார்கள்.

அவர்களுடைய உறவுகள் எங்களுடன் தொடர்பு கொண்டு சிறையிலுள்ள சூழல் தொடர்பாக தவிப்புடன் இருக்கின்றார்கள்.

இந்த விடயம் தொடர்பாக சம்பந்தப்பட்ட தரப்புகள் உடனடியாக விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதே நேரத்தில் அரசியல் கைதிகளையும் மகசின் சிறைச்சாலைக்கு நேரடியாக சென்று பார்வையிட்டு அவர்களது நிலைவரம் தொடர்பாக அரசியல் கைதிகளது பெற்றோர்க ளுக்கு தெரியப்படுத்த வேண்டும் என தமிழ்த் தேசிய நாடாளுமன்ற உறுப்பினர்களையும் மனிதநேயத்தோடு செயல்படக்கூடிய அனைவரையும் கேட்டுக்கொள்கின் றோம்.

ஜனாதிபதியைத் தமிழ்த் தேசிய நாடாளு மன்ற உறுப்பினர்கள் சந்தித்து, எம்மால் கையளிக்கப்பட்ட பெயர் பட்டியல் ஜனாதிப திக்கு கையளிக்கப்பட்டிருந்தது.

அதில் 24 பேர் தண்டனை வழங்கப்பட்டு இருக்கின்றார்கள். பத்து வழக்குகளில் 22 பேரும், தண்டனை விதிக்கப்பட்டவர்கள் மேன்முறையீடு செய்தவர்கள் என 24 பேருமாக மொத்தம் 46 தமிழ் அரசியல் கைதிகள் காணப்படுகின்றனர்.

உடனடியாக 24 பேரை விடுதலை செய்ய முடியும் என ஜனாதிபதி கூறியமையுடன், நீதி அமைச்சர் ஐ.நாவுக்கு சென்றிருப்பதால் அவர் வந்த பின்னர் இது தொடர்பான முடிவுகள் எடுக்கப்படும் என வாக்குறுதி அளிக்கப்பட்டிருக்கின்றது.

இந்த விடயம் ஐ.நா. மனித உரிமை அமர்வு முடிவடைவதற்கு முன்பாக இடம்பெற வேண்டும் என்பது எமது எதிர்பார்ப்பு.

இந்த விடயத்தில் தமிழ்த் தேசிய நாடாளு மன்ற உறுப்பினர்கள் கண்ணை மூடிக் கொண்டு இருக்காது செயற்பட வேண்டும்.

அனைவருக்கும் இதில் பொறுப்பு இருக்கின்றது. நல்லாட்சி அரசு காலத்திலும் நாம் ஏமாற்றப்பட்டு இருக்கின்றோம். அதே விடயம் இந்தக் காலப்பகுதியிலும் இடம் பெறுமா என்பது தொடர்பாக நாம் கவலை அடைகின்றோம்.

குற்ற ஒப்புதல் வாக்குமூலம் என அழைக் கப்பட்டு விடுதலை செய்யப்பட்டவர்களை அன்றிரவேசட்டமாஅதிபர்திணைக்களத்தால் மீண்டும் வழக்குகளை தாக்கல் செய்யப்பட்டு அதற்கான வழக்கு இலக்கங்கள் வழங்கப் பட்டிருக்கின்றது.

எதிர்வரும் 13 ஆம் திகதி கொழும்பு உயர் நீதிமன்றத்திலும் 15 ஆம் திகதி பதுளையி லும் உள்ள நீதிமன்றத்திலும் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டு இருக்கின்றன.

இவர்கள் 2009 ஆம் ஆண்டு கைது செய்யப்பட்டவர்களுடன் 14 வருடங்களுக்குப் பிறகு இவ்வாறான ஒரு துன்பியல் சம்பவமொன்று இடம்பெற்றிருக்கின்றது.

அரசியல் கைதிகள் விடுதலை செய்யக் கூடாது என்ற நோக்கில் அரசாங்கம் செயற் படுகின்றதா என்பதை மீண்டும் எடுத்துக்காட்டும் சம்பவமாக இது காணப் படுகிறது. அரசாங்கத்தினுடைய இரட்டை வேடத்தை இது காட்டுகின்றது – என்றார்.

# தந்தையின் வானில் சிக்குண்டு உயிரிழந்த இரண்டு வயது மகள்

(ஹஸ்பர்)

திருகோணமலை தம்பலகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நாயன்மார் திடல் பகுதியில் தந்தையின் வானில் சிக்குண்ட சிறுமி பலியான சம்பவம் ஒன்று நேற்று இடம் பெற்றுள்ளது.

தந்தை வீட்டில் வைத்து திருகோணம லைக்கு திருமண வைபவத்துக்கு செல்ல உள்ள நிலையில் வானைப் பின்னால் எடுத்த போது அதற்குள் சிக்குண்டு அந்த இடத்தில் மகள் பலியானார் என ஆரம்பக் கட்ட விசாரணை மூலம் தெரியவருகிறது.

இவ்வாறு உயிரிழந்த சிறுமி தம்பல காமம் நாயன்மார் திடலை சேர்ந்த ஆர்.நசிட்றா எனப் பொலிஸார் தெரிவித்த னர்.

வான் தற்போது தம்பலகாமம் பொலிஸ் நிலையத்தில் வைக்கப்பட்டுள்ளது. பிள்ளையின் சடலம் திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப் பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசார ணைகளை தம்பலகாமம் பொலிஸார் முன் னெடுத்துள்ளனர்.

# சேனையூரில் வெள்ளியன்று எழுத்தாளர்கள் ஒன்றுகூடல்

(பைசல் இஸ்மாயில்)

கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் தி ணைக்களத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டு நடத்தப்பட்டுவருகின்ற எழுத்தாளர்களுக்கான ஒன்று கூடல் நிகழ்வும், பிரதேச சாகித்திய விழாவும் நாளை மறுதினம் 10 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.00 மணியளவில் மூதூர் – சேனையூர் அநாமிகா பண்பாட்டு மையத்தில் இடம்பெறவுள்ளன.

கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் தி ணைக்களத்தின் மாகாண பணிப்பாளர் திரு மதி. சரண்யா சுதர்சன் தலைமையில் இடம் பெறவுள்ள இவ்விழாவுக்கு முதன்மை அழைப்பாளராக ஓய்வுபெற்ற அதிபர் இரா. இரத்தினசிங்கம் கலந்துகொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

இந்நிகழ்வுக்கு கிண்ணியா, மூதூர், வெருகல், சேருநுவர ஆகிய பிரதேச செய லகப் பிரிவுகளில் இருக்கின்ற எழுத்தாளர்கள், கலைஞர்கள் ஆகியோர் அழைக்கப்பட்டு அவர்களுக்குள் ஒரு அறிமுகத்தையும், அவர்களுக்குள் இருக்கின்ற கலை, கலாசார செயற்பாடுகளை ஊக்குவிக்கும் நோக்கு டனேயே இந்த ஒன்றுகூடல் நிகழ்வு நடத்தப்படுகின்றது.

அண்மைக்காலமாக, மாகாண பண்பாட் டலுவல்கள் திணைக்களம் இவ்வாறான நிகழ்வுகளை மாவட்ட ரீதியாகவும், பிரதேச செயலகங்கள் ரீதியாகவும் நடாத்தி வருகின் றமையும் குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு





# சீன நிலநடுக்கத்தில் பலியானோர் எண்ணிக்கை 74 ஆக உயர்ந்தது!

பீஜிங்,செப்.08

சீனாவில் ஏற்பட்ட சக்தி வாய்ந்த நிலநடுக்கத்திற்கு உயிரிழந்தோர் எண்ணிக்கை 74 ஆக உயர்வடைந்து உள்ளது.

சீனாவில் கொரோனா பாதிப்புகள், வெப்ப அலை பரவல் ஆகியவற்றால் மக்கள் ஒருபுறம் தவித்து வரும் சூழலில் அந்நாட்டின் தென்மேற்கே அமைந்த சிச்சுவான் மாகாணத்தில் கன்ஜி திபெத்திய சுயாட்சிக்குட்பட்ட லூடிங் கவுன்டி பகுதியில் கடந்த திங்கட்கிழமை மதியம் 12.52 மணியளவில் சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. இது ரிக்டரில் 6.8 ஆக பதிவானது. இதனால், பல பகுதிகளில் நில சரிவுகள் ஏற்பட்டன. வீடுகள் மற்றும் கட்டடங்கள் குலுங்கின. நூறுக்கும் மேற்பட்ட வீடுகள் இடிந்து விழுந்தன. நில சரிவு ஏற்பட்டதில் பெரிய கற்கள் உருண்டு விழுந்து நெடுஞ்சாலையில் போக்குவரத்து பாதிப்பும் ஏற்பட்டது. மின் இணைப்புகள் துண்டிக்கப்பட்டன.

நிலநடுக்கத்திற்கு பின்னர் அருகேயுள்ள பல பகுதிகளில் தொடர் அதிர்வுகளும் உணரப்பட்டு உள்ளன. சக்தி வாய்ந்த நிலநடுக்கத்திற்கு பின்னர் ரிக்டரில் 3.0 அளவிலான மொத்தம் 10 நிலஅதிர்வுகள் ஏற்பட்டு உள்ளன. நிலநடுக்கம் எதிரொலியாக 50 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் புலம் பெயர்ந்து வேறு இடங்களுக்கு சென்றுள்ளனர்.

சிச்சுவானின் தலைநகர் செங்டுவில் கொரோனா பரவலைக் கட்டுப்படுத்தும் நோக்குடன் அரசு விதித்த தடையை அடுத்து 2.1 கோடி மக்கள் வீடுகளிலேயே முடங்கி கிடக்கின்றனர். இதனைத் தொடர்ந்து, இந்த பகுதியில் அதிகாரிகள் பல பசுமை வழிகளை ஏற்படுத்தி, மீட்பு பணியாளர்கள் லூடிங் பகுதிக்கு செல்வதற்கு ஏற்ற வகையில் வழி ஏற்படுத்தி தந்துள்ளனர். நிவாரண பணி மேற்கொள்ள வசதியாக விரைவு சாலை வழியே செல்ல 700 சிறப்பு வழிகள் அமைக்கப்பட்டு உள்ளன. 1,900க்கும் மேற்பட்ட அதிகாரிகள், ஆயுத பொலிஸார் மற்றும்ராணுவ வீரர்கள் உள்ளிட்டோர் நிலநடுக்கம் பாதித்த பகுதிக்கு அனுப்பி வைக்கப்பட்டு உள்ளனர்.

இவற்றில் சிச்சுவான் மாகாணத்தில் கன்ஜி பகுதியில் 40 பேர் உயிரிழந்து உள்ளனர். 14 பேரை காணவில்லை. 170 பேர் காயமடைந்து உள்ளனர் என நேற்றிரவு தகவலின்படி தெரிவிக்கப்பட்டு உள்ளது. இதனால் நிலநடுக்கத்திற்கு மொத்த உயிரிழப்பு 74 ஆக உயர்வடைந்து உள்ளது.

சீன அதிபர் ஜின்பிங், உயிர்களை காப்பதிலும் மற்றும் உயிரிழப்புகள் மற்றும் காயமடைவோரின் எண்ணிக்கையை குறைப்பதற்கான அனைத்து வித நிவாரண முயற்சிகளுக்கு முக்கியத்துவம் அளிக்கும்படி அதிகாரிகளைக் கேட்டு கொண்டுள்ளார்.


சீனாவின் செஞ்சிலுவை சங்கம் அமைப்பு அவசரகால நிவாரண பணிகளில் ஈடுபட்டு வருகின்றன. கூடாரங்கள், நிவாரண தொகுப்புகள், மடிப்பு படுக்கைகள் உள்ளிட்ட நிவாரண பொருள்கள் அனுப்பி வைக்கப்பட்டு உள்ளன. நிவாரண மற்றும் மீட்பு பணிகளை மேற்கொள்வதற்காக பணியாளர் குழு ஒன்றையும் அந்த அமைப்பு அனுப்பி வைத்து உள்ளது. நிலநடுக்கம் பாதித்த பகுதியிலுள்ள 22 ஆயிரம் வீடுகளுக்கான மின் இணைப்பு துண்டிக்கப்பட்ட நிலையில், நிலைமை சீர் செய்யப்பட்டு உள்ளது.

# இந்தியா – சீனா – ரஷ்யா கூட்டாக மேற்கொண்ட இராணுவப் பயிற்சி

## அதிபர் புடின் நேரில் பார்வையிட்டார்

மொஸ்கோ,செப்.08

இந்தியா, சீனா உள்ளிட்ட ரஷ்ய நட்பு நாடுகள் பங்குகொண்டமிகப்பெரிய அளவிலான கூட்டு இராணுவப் பயிற்சியை ரஷ்ய அதிபர் புடின் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்




இந்த இராணுவப் பயிற்சியில் கூர்க்கா ரைஃபிள்ஸ் படையை சேர்ந்த இந்திய இராணுவக் குழுவினர் பங்கேற்றனர்.

'வோஸ்டாக் - 2022' எனப்படும் பல்முனை இராணுவ உத்தி மற்றும் செயல்திறன் பயிற்சி, ரஷ்யாவின் கிழக்கு இராணுவ மாவட்ட செர்ஜியேவ்ஸ்கி பயிற்சி மைதானத்தில்கடந்த முதலாம்திகதி தொடங்கியது.

ஏழு நாள்களில் கூட்டு களப்பயிற்சிகள், போர் விவாதங்கள் மற்றும் வீர, தீர பயிற்சிகளில் இந்திய ராணுவ குழுவினர் ஈடுபட்டனர்.

இந்தப் பயிற்சி பிற இராணுவக் குழுக்கள், பார்வையாளர்களிடையே தொடர்பு மற்றும் ஒருங்கிணைப்பை ஏற்படுத்துவதை நோக்கமாக கொண்டது. இராணுவச் செயல்முறைகளை நடைமுறைப்படுத்துதல், புதிய தொழில்நுட்பத்தை ஒருங்கிணைப்பதற்கான நடைமுறைகள் உள்ளிட்டவற்றை ஒட்டி பயிற்சி மேற்கொள்ளப்பட்டது.

இந்த நிலையில், இந்தியா, சீனா உள்ளிட்ட ரஷ்ய நட்பு நாடுகள் பங்கு கொண்ட மிகப்பெரிய அளவிலான கூட்டு இராணுவப் பயிற்சியை ரஷ்ய அதிபர் புடின் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார். அப்போது கூட்டு இராணுவப் பயிற்சிகள் குறித்து அதிகாரிகளிடம் ஆலோசனை மேற்கொண்டார்.



# அமெரிக்கர்களுக்கு வருடாந்தம் கொரோனாத் தடுப்பூசி வழங்கல்

## ஜனாதிபதி ஜோ பைடன் அறிவிப்பு

அமெரிக்கர்களுக்கு ஆண்டுதோறும் கொரோனாத் தடுப்பூசி வழங்கப்படும் என்று அந்நாட்டின் ஜனாதிபதி ஜோ பைடன் அறிவித்துள்ளார்.

கொரோனா வைரஸால் உலகளவில் பெரும் பாதிப்புக்குள்ளான நாடு அமெரிக்கா. அங்கு 12 வயதுக்கு மேற்பட்டோருக்கு ஆண்டுதோறும் கொரோனா வைரஸ் தடுப்பூசி போடப் படும் என்ற அறிவிப்பை அந்த நாட்டின் ஜனாதிபதி ஜோ பைடன் வெளியிட்டுள்ளார்.

இதுபற்றி அவர் விடுத்துள்ள அறிக்கையில் –

நாங்கள் 2 ஆண்டுகளில் முதல் முறையாக ஒரு புதிய தடுப்பூசியை தொடங்குகிறோம். இது புதிய அணுகுமுறை ஆகும். பெரும்பாலான அமெரிக்கர்களுக்கு ஆண்டுக்கு ஒரு டோஸ் போடப்படும். கொரோனா வைரஸ் தொடர்ந்து மாறி வருவதால், ஆதிக்கம் செலுத்துகிற உருமாறும் வைரஸ்களை இலக்காக கொண்டு, நமது தடுப்பூசிகளை புதுப்பிக்க முடியும். வருடாந்திர காய்ச்சல் தடுப்பூசியைப்போலவே இந்த தடுப்பூசியை தொழிலாளர் தினத்துக்கும், ஹாலோவீனுக்கும் (இது அக்டோபர் மாதம் வரும்) இடையே நீங்கள் அதைப் போட்டுக் கொள்ள வேண்டும். இது பாதுகாப்பானது. இதைப் பெறுவது எளிது. இது இலவசம் என தெரிவித்துள்ளார். இந்த பூஸ்டர் டோஸ் தடுப்பூசியை பைசர் - பயோஎன்டெக் நிறுவனங்கள் கூட்டாக உருவாக்கி உள்ளன.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு







# பாத யாத்திரையைத் தொடங்கியிருக்கும் ராகுல் காந்தி அடுத்த 150 நாள்கள் கண்டெய்னர்களில்தான் தூக்கம்!

## பயணம் முடியும் வரை எளிய வாழக்கையை கடைப்பிடிக்க முடிவு

'இந்திய ஒற்றுமைப் பயணம்' என்று பெயரிடப்பட்டுள்ள காங்கிரஸ் எம்.பி. ராகுல்காந்தியின் பாத யாத்திரைப் பயணம் கன்னியாகுமரியில் நேற்று தொடங்கியது. முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கதரால் ஆன தேசிய கொடியை காந்தி மண்டபம் முன்பு ராகுல் காந்தியிடம் வழுங்கி பாத யாத்திரையை தொடங்கி வைத்தார். இன்று முதல் 10 ஆம் திகதி வரை குமரி மாவட்டத்தில் ராகுல்காந்தி பாத யாத்திரை மேற்கொள்கிறார். கன்னியாகுமரியில் தொடங்கும் இந்த பாதயாத்திரை மொத்தம் 150 நாள்கள் திருவனந்தபுரம், கொச்சி, நிலாம்பூர், மைசூர், பெல்லாரி, தெய்ச்சூர், விகாராபாத், நாந்தெட், இந்தூர், கோட்டா, தவுசா, ஆழ்வார், புலுந்த்கர், டெல்லி, அம்பாலா, பதன் கோட், ஜம்மு வழியாக ஸ்ரீநகரை சென்றடைகிறது.

இந்நிலையில் தமது நடை பயணத்தின் போது இரவு ராகுல்காந்தி எங்கு ஓய்வு எடுப்பார் என்பது குறித்து காங்கிரஸ் கட்சி தெளிவுபடுத்தி உள்ளது. அதன்படி அவர் எந்த ஹோட்டலிலும் தங்க மாட்டார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



ராகுல்காந்தி இரவு வேளையில் தூங்குவதற்காக பாத யாத்திரை செல்லும் பல்வேறு மாநிலங்களில் நிலவும் தட்பவெட்ப நிலை மற்றும் சுற்றுச் சூழலுக்கு ஏற்ப 60 சிறப்பு கண்டெய்னர்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. இதில் படுக்கை வசதி, கழிப்பறை உள்ளிட்டவை அமைக்கப்பட்டுள்ளன. இந்த கண்டெய்னர்கள் ராகுல்காந்தியின் நடைபயணம் மேற்கொள்ளும் மாநிலங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. அடுத்த 150 நாள்களுக்கு இந்த கண்டெய்னர்களில் ராகுல்காந்தி இரவு நேரப் ஓய்வெடுப்பார் எனத் தகவல்கள் வெளியாகி உள்ளன மேலும் தமது பயணத்தில் உடன் வருவோர் அனை வருடன் ஒரே நேரத்தில் ஒன்றாகவே சாப்பிட ராகுல் முடிவு செய்துள்ளார் எனவும், நடைபயணம் முடியுப் வரை ஆடம்பரம் இன்றி எளிய வாழக்கை முறைை கடைப்பிடிக்க அவர் திட்டமிட்டுள்ளார் எனவுப் தகவலகள் வெளியாகி உள்ளன.

இதற்கிடையில், தமது சகோதரரின் பாரத் ஜோடே யாத்ரா குறித்து கருத்து தெரிவித்துள்ள காங்கிரஸ் பொதுச் செயலாளர் பிரியங்கா காந்தி, 'நாங்கள் ஒரு நேர்மறையான அரசியலைத் தொடங்குகிறோம் நாங்கள் உங்கள் பிரச்சினைகளைத் தீர்க்க விரும்பு கிறோம்.எங்கள் அன்பான நாட்டை ஒன்றுபடுத்துங்கள் இந்தியாவை ஒன்றாக இணைப்போம்' - என்று தனது முகப் புத்தக வீடியோவில் தெரிவித்துள் ளார். இன்றைய அரசியல் நாட்டு மக்களின் பிரச்சினை களை புறக்க ணித்து முற்றிலும் மாறுபட்ட திசையில் செல்வதாகவும் இந்த பாத யாத்திரை மூலம் சமானிய மக்களின் பிரச்சி னைகள் மற்றும் கவலைகளை வெளியே கொண்டு வர விரும்புகிறோம் என்றும் பிரியங்கா குறிப்பிட்டுள்ளார்.

# இந்தியா – ரஷ்யா நாடுகளுக்கு இடையே எரிசக்தித் துறையில் சிறந்த ஒத்துழைப்பு

## புடின் பங்குபற்றிய நிகழ்வில் மோடி காணொலியில் உரை

விளாடிவோஸ்டாக்,செப்.08

உக்ரைன் - ரஷ்யா மோதலை முடிவுக்குக் கொண்டு வரும் அமைதி முயற்சிக்கு முழு ஆதரவு என்றும், எரிசக்தித் துறையில் இந்தியா - ரஷ்யா இடையே சிறந்த ஒத்துழைப்பிற்கு வாய்ப்புள்ளது என்றும் இந்தியல் பிரதமர் மோடி தெரிவித்தார். ரஷ்யாவின் விளாடிவோஸ்டாக் நகரில் நடைபெற்ற 7 ஆவது கிழக்குப் பொருளாதார மன்றக் கூட்டத்தில் பிரதமர் மோடி காணொலி மூலம் உரையாற்றினார். அப்போது அவர் கூறியவை வருமாறு:-

காணொலிக் காட்சி வாயிலாக சிறப்பு விருந்தினர் அதிபர் புதின் உடன் உரையாட எனக்கு வாய்ப்பு கிடைத்தற்காக நான் மகிழ்ச்சி அடைகிறேன். விளாடிவோஸ்டாக்கில், இந்திய தூதரகம் அமைக்கப்பட்டதன் 30ஆம் ஆண்டு இம்மாதம் கடைப்பிடிக்கப்படுகிறது. இந்நகரத்தில், முதல் முதலாக இந்தியா தான் தூதரகத்தை திறந்தது. அதன் பிறகு நமது நட்புறவின் அடையாளமாக இந்நகரம் திகழ்ந்தது. 2019ஆம் ஆண்டில், இந்த மன்றக் கூட்டத்தில், பங்கேற்பதற்கான வாய்ப்பு எனக்கு கிடைத்தது. அந்நேரத்தில், இந்தியாவின் கிழக்கு தூரக் கொள்கையை நாம் அறிவித்தோம். இன்று இந்தக் கொள்கை இந்தியா மற்றும் ரஷ்யாவின் சிறப்பு நட்புறவில் முக்கிய தூணாக திகழ்கிறது. சென்னை - விளாடிவோஸ்டாக் கடல்சார் முனையம் அல்லது வடக்கு கடல்வழி போக்குவரத்து நமது எதிர்கால வளர்ச்சியில், முக்கிய பங்கு வகிக்கும். ஆர்டிக் விவகாரங்களில் ரஷ்யாவுடன் ஒத்துழைப்பை வலுப்படுத்த இந்தியா விரும்புகிறது. எரிசக்தித் துறையில் சிறந்த ஒத்துழைப்பிற்கான வாய்ப்பு உள்ளது. எரிசக்தித்துறையுடன் ரஷ்ய தூரகிழக்கு கொள்கையின்படி மருந்து மற்றும் வைரங்கள் துறைகளில் இந்தியா பெருமளவு முதலீடு செய்துள்ளது. நிலக்கரி விநியோகம் மூலம் இந்திய எஃகு துறையில், முக்கிய கூட்டாளியாக ரஷ்யா திகழ முடியும். திறன்களை பரிமாறிக் கொள்வதில் நமக்கிடையே நல்ல ஒத்துழைப்பு உள்ளது. உலகின் பல்வேறு வளர்ச்சி அடைந்த நாடுகளில் இந்தியா திறன் களை பகிர்ந்துள்ளது. உலகம் ஒரு குடும்பம் என்ற இந்தியாவின் பழங்கால கோட்பாடுபடி இன்றைய உலகமயமாக்கலில் உலகின் ஒரு பகுதியில் ஏற்படும் நிகழ்வுகள் மொத்த உலகிலும் தாக்கத்தை ஏற்படுத்தும்.

உக்ரைன் போர் மற்றும் கொரோனா பெருந்தொற்று ஆகியவை உலக விநியோக அமைப்பில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தின. உணவு தானியங்கள், உரங்கள், எரிபொருள் ஆகியவற்றில் ஏற்பட்ட பற்றாக்குறை வளரும் நாடுகளில் மிகப் பெரிய கவலையை ஏற்படுத்தியது. உக்ரைன் ரஷ்யா போரின் தொடக்கத்திலிருந்தே தூதரக அளவிலான பேச்சுவார்த் தையை நாம் வலியுறுத்தி இருக்கிறோம். இந்த மோதலை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான அனைத்து அமைதிக்கான முயற்சிகளுக்கும் நாங்கள் ஆதரவளிக்கிறோம். இந்த வகையில், தானியங்கள் மற்றும் உரங்களின் பாதுகாப்பான ஏற்றுமதி ஒப்பந்தத்தை நாங்கள் வரவேற்கிறோம். இந்த மன்றக் கூட்டத்தில் உரையாற்ற வாய்ப்ப ளித்த அதிபர் புதினுக்கு மீண்டும் ஒரு முறை நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். - இவ்வாறு பிரதமர் குறிப்பிட்டார்.

# அ.தி.மு.க. தலைமை அலுவலகத்திற்கு 72 நாள்களின் பின்பு வந்தார் எடப்பாடி

## அவருக்குத் தொண்டர்கள் கோலாகல வரவேற்பு



72 நாள்களுக்கு பிறகு அ.தி.மு.க. தலைமை அலுவலகத்திற்கு வந்தார் எடப்பாடி பழனிசாமி.எடப்பாடி பழனிசாமிக்கு அவரது ஆதரவாளர்கள், தொண்டர்கள் உற்சாக வரவேற்பு அளித்தனர்.

கடந்த ஜூலை மாதம் 11 ஆம் திகதி அ.தி.மு.க. பொதுக்குழுவில் கட்சியின் இடைக்காலஒ பொதுச் செயலாளராக எடப்பாடி பழனிசாமி தேர்ந்தெடுக்கப்பட்டார். அந்த நேரத்தில் சென்னை ராயப்பேட்டையில் உள்ள கட்சி தலைமை அலுவலகத்தில் ஓ.பன்னீர்செல்வம் – எடப்பாடி பழனிசாமி தரப்புக்கும் இடையே ஏற்பட்ட மோதலை தொடர்ந்து அலுவலகத்துக்கு 'சீல்' வைக்கப்பட்டது.

பின்னர் ஐகோர்ட்டு உத்தரவின்படி அந்த 'சீல்' அகற்றப் பட்டு, சாவி எடப்பாடி பழனிசாமி தரப்பிடம் ஒப்படைக்கப்பட்டது. எடப்பாடி பழனிசாமி இன்று தலைமை அலுவலகத்திற்கு அலுவலகத்திற்கு வருவார் என அறிவிக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து சென்னை ராயப் பேட்டையில் உள்ள அ.தி. மு.க. தலைமை அலுவலகத்தில 'எங்கள் சாமி எடப்பாடி பழனிச்சாமி' என முகப்பு பேனர் வைத்து, அலு வலகப் வரவுள்ள கட்சியின் இடைக்கால பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமியை வரவேற்க கட்சியினர் திரண்டனர். அ.தி.மு.க தலைமை அலுவலகம் வரும் எடப்பாடி பழனிசாமிக்கு இல்லத்திலிருந்தே வரவேற்பு அளிக்கப் பட்டது.

அவரது ஆதரவாளர்கள் தொண்டர்கள் உற்சாக வரவேற்பு அளித்தனர். தலைமை அலுவலக வளாகத்தில் உள்ள எம்.ஜி.ஆர் ஜெயலலிதா சிலைக்கு எடப்பாடி பழனிசாமி மலர்தூவி மரியாதை செலுத்தினார்.

அ.தி.மு.க. அலுவலகத்தில் ஜூலை 11 ஆம் திகதி நடந்த வன்முறையால் பாதிக்கப்பட்ட அறை களையும் எடப்பாடி பழனிசாமி பார்வையிட்டார். கரகாட்டம் செண்டை மேளம், தப்பாட்டம் பேண்ட் வாத்தியத்துடன் கூடிய தோரண வரவேற்பு அளிக்கப்பட்டது.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# உயர்தரப் பரீட்சை முடிவில் கிழக்கு மாகாணம் 9 ஆவது இடத்திலிருந்து முதலாம் இடத்துக்கு!

## கல்விப் புலத்தினரின் ஒன்றிணைந்த செயற்பாட்டுக்கு வெற்றி




(நூருல் ஹுதா உமர்)

உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளின் பகுப்பாய்வில் கிழக்கு மாகாணம் முதலிடம் பெற்றமைக்கு அர்ப்பணிப்புள்ள ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் கல்விப்புலப் பணிப்பாளர்களின் சிறப்பான முன்னெடுப்புக்களே காரணம் என இலங்கை இஸ்லாமிய ஆசிரியர் சங்கம் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் சங்கத்தின் சார்பில் அதன் தலைவர் ஜெஸ்மி எம்.மூஸா விடுத்துள்ள ஊடக அறிக்கையிலேயே மேற்படி விடயம் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது;

கல்வியமைச்சு உயர்தரப் பரீட்சையினை மேற்கோளாக வைத்து மேற்கொண்ட பகுப்பாய்வில் கிழக்கு மாகாணம் ஒன்பதாவது இடத்திலிருந்து முதலாவது இடத்திற்கு முன்னேறியுள்ளது. இது மிகவும் சந்தோசமான செய்தியாகும். கடந்த இரண்டு வருடங்களில் கொரோனா மற்றும் பொருளாதார ஸ்திரமற்ற நிலைகளால் மாணவர்களின் பாடசாலைக் கல்வி நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டிருந்தன. எனினும் கிழக்கு மாகாண ஆளுநர், கல்வியமைச்சின் செயலாளர், மாகாணப் பணிப்பாளர் ஆகியோரின் முறையான செயற்பாடுகளினால் பல்வேறு செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. தொடரான மாணவர் கல்விச் செயற்பாட்டில் இவர்கள் குறியாக இருந்து செயற்பட்டனர். கல்விப் பணிப்பாளர்களுக்கான அறிவுறுத்தல்களின் அடிப்படையில் பாடசாலை அதிபர்களின் முறையான கண்காணிப்பு அறிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன. பாடசாலைகள் மூடப்பட்டிருந்த காலங்களிலும் மாற்றீட்டுச் செயற்பாடுகள் ஆசிரியர்களால் முன்னெடுக்கப்பட்டன.

அகில இலங்கையில் உயிரியல் பிரிவில் முதலிடம் பெற்ற மாணவன் தமிழ் வண்ணன் துவாரகேஷின் பங்களிப்பு இக்காலப்பகுதியில் குறிப்பிடகூடியது. அவரது வரலாற்றுச் சாதனை மாகாணத்தின் கல்விப்புலத்தின் உறுப்பினர்கள் ஒவ்வொருவரையும் அகமகிழ வைக்கிறது. பாடசாலைக் கல்வியினை முழுமையாக பின் தொடர்ந்தமையே தமது இலக்குக்கான வெற்றியென அம் மாணவன் தெரிவித்த கருத்துக்களும் இவ்விடத்தில் குறிப்பிட்டுக் காட்டக் கூடியதாகும்.

பரீட்சைக்குத் தோற்றிய தனிப்பட்ட மற்றும் பாடசாலைப் பரீட்சாத்திகள் 2 இலட்சத்து 72 ஆயிரத்து 682 பேரில் ஒரு இலட்சத்து 71 ஆயிரத்து 491 பேர் பல்கலைக்கழகத்திற்கு விண்ணப்பிக்கத் தகுதி பெற்றுள்ளனர். இதில் கிழக்கு மாகாணத்திலிருந்து தோற்றிய 17 ஆயிரத்து 25 பேர் பரீட்சைக்குத் தோற்றியிருந்தனர். அதில் 11 ஆயிரத்து 237 பேர் பல்கலைக்கழக நுழைவினைப் பெற்றுள்ளதுடன் 472 பேர் 3 பாடங்களிலும் ஏ சித்திகளைப் பெற்று சாதனை படைத்துள்ளனர்.

இவ்வாறானதொரு நிலையினை பெற்று வரலாற்றுச் சாதனை மிக்க மாகாணமாவதற்கு உந்து சக்தியாக அமைந்த மாகாணக் கல்விப் பணிப்பாளர் அடங்கலாக அனைத்து அதிகாரிகள், வலயக் கல்விப் பணிப்பாளர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள், மேலதிக வகுப்புக்களில் பங்கேற்ற வளவாளார்கள், பெற்றோர்கள் மற்றும் இச் சாதனைக்கு மூலமாக அமைந்த மாணவர்கள் ஆகியோருக்கு இலங்கை இஸ்லாமிய ஆசிரியர் சங்கம் தமது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறது. – என அந்த அறிக்கையில் மேலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது

# செந்தமிழ் ஆகம முறைப்படி இறை நன்னீராட்டு பெருவிழா

## மட்டக்களப்பு ஈச்சர ஆலயத்தில்

(காரைதீவு நிருபர் சகா)

மட்டக்களப்பு மயிலம்பாவெளி சவுக்கடியில் எழுந்தருளியுள்ள மட்டக்களப்பு ஈச்சர ஆலயத்திற்கான இறை நன்னீராட்டுப் பெரு விழா செந்தமிழ் ஆகம முறைப்படி நாளை மறுதினம் சனிக்கிழமை நடைபெற இருக்கின்றது .

மட்டக்களப்பு ஆதீனத்தின் ஸ்தாபக தலைவரும், பணிப்பாளருமான மு.ஜெயபாலன் முன்னிலையில்

சனிக்கிழமை காலை 6.00 மணி முதல் 9.30 மணி வரையிலான சுபமுகூர்த்த வேளையில் இறைநன்னீராட்டு பெருவிழா நடைபெறவிருக்கிறது.

அதனையொட்டி நாளை வெள்ளிக்கிழமை முழு நாளும் எண்ணெய்க்காப்பு சாத்தும் நிகழ்வு இடம்பெற இருக்கின்றது.

செந்தமிழ்ஆகமதலைமை அருட்சுனைஞர் சிவத்திரு தனியொளி சிவம் செல்லத்துரை பிரசாத்( யாழ்ப்பாணம், இணுவில், ஞானலிங்கேச்சரதிருக்கோவில் குரு) தலைமையில் இறை நன்னீராட்டுப் பெருவிழா இடம் பெற இருக்கின்றது.

செந்தமிழ் ஆகம உதவி அருட் சுனைஞர்களாக சிவத்திரு சிவகுமரன் சிவலதன், சிவத்திருதவக்குமார் டிலக்ஷன், சிவத்திருகணநாதன் சுதாகரன் ஆகியோர்செயலாற்றுவார்கள்.

இறை நன்னீராட்டு பெருவிழா நிறைவில் அடியார்களுக்கு அன்னதானம் வழங்கப்பட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

# பாடசாலை நீர், மின் கட்டணங்களை கிழக்கில் அரசே செலுத்த வலியுறுத்தல்



கிழக்குமாகாணத்தில்உள்ளபாடசாலைகளில் இதுவரை காலமும் அரசாங்கத்தால் செலுத்தப்பட்டு வந்த நீர்க் கட்டணங்களை இனிமேல் பாடசாலைகள்தான் பொறுப்பேற்க வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அதேபோன்று, மின் கட்டணங்களை செலுத்துவதற்கு ரூபாய் 1,200 வழங்கப்படுகிறது. வேறு மாகாணங்களில் இதைவிட கூடுதலாக வழங்கப்படுகிறது. எனினும், கிழக்கு மாகாண பாடசாலைகள் கஷ்டத்தை எதிர்கொள்வதால் இந்தக் கட்டணங்களை அரசாங்கம் முழுமையாக செலுத்த நடவடிக்கை மேற்கொள்ளுமாறு திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மகரூப், அரசாங்கத்திடம் வேண்டுகோள் விடுத்தார்.

மேலும், வைத்தியசாலைகளில் காணப்படுகின்ற அம்புலன்ஸ்களுக்கு கியூ.ஆர். முறைமை ஊடாக 50 லீற்றர் பெட்ரோல் பெறுவதற்கான வாய்ப்புக்கள் மாத்திரம் காணப்படுவதாகவல், அதேபோன்று ஓட்டோகளுக்கும் 5 லீற்றர் பெட்ரோல் போதாது உள்ளமையால் அம்புலன்ஸ் மற்றும் ஓட்டோகளுக்கு மேலதிக எரிபொருள் வழங்க நடவடிக்கை எடுக்குமாறும் அவர் அரசாங்கத்தைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

# குற்றச் செயலை தடுத்தல் சம்பந்தமாக மாணவருக்கு விழிப்புணர்வு செயலமர்வு

## அக்கரைப்பற்று ஸ்ரீ இராமகிருஷ்ணா கல்லூரியில்





(காரைதீவு நிருபர் சகா)

இலங்கை பொலிஸ் சேவையின் 156 ஆவது வருட நிறைவை முன்னிட்டு கடந்த திங்கட்கிழமை அக்கரைப்பற்று ஸ்ரீ இராமகிருஷ்ணா கல்லூரியில் அக்கரைப்பற்றுப் பொலிஸ் பிரிவினால் வீதி விபத்துத் தவிர்ப்பு, போதைப்பொருள் குற்றச் செயலைத் தடுத்தல் சம்பந்தமாக விழிப்புணர்வு செயலமர்வு பாடசாலை அதிபர் டேவிட் அமிர்தலிங்கம் தலைமையில் இடம் பெற்றது,.

அக்கரைப்பற்று பொலிஸ் நிலைய குற்றவியல் பொறுப்பதிகாரி மஜீத், வீதிப் போக்குவரத்து அதிகாரி ஆனந்த, சிறுவர்களுக்குப் பொறுப்பான உத்தியோகத்தர் பாலகிஷ்ணன் ரூபினி, பாடசாலையின் பிரதி அதிபர் ஜெயந்தன், பெற்றோர்கள், மாணவர்கள் என பலரும் கலந்து சிறப்பித்தனர்.



# விவசாயிகளுக்குத் தொழில் நுட்ப அறிவை வழங்க தென்கிழக்குப் பல்கலைக்கழகம் தயாராகவுள்ளது!

விவசாய ஆராய்ச்சி, உற்பத்தி தொடர்பான பயிற்சிகளை வழங்குவதற்கும், விவசாயிகளுக்குத் தேவையான தொழிநுட்ப மற்றும் நடைமுறை ரீதியான அறிவை வழங்குவதற்கு தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் தொழிநுட்ப பீடம் தயாராகவுள்ளதாக உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் தெரிவித்துள்ளார்.

தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலில் இது தொடர்பில் கருத்து தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

விவசாய விரிவாக்கம், சமூக பொருளாதார சூழ்நிலைகளுக்கு ஏற்றதாக இருந்தால், புதிய தொழிநுட்பங்களைப் பின்பற்றுவதற்கு விவசாயிகளுக்கு உரிய ஆலோசனைகளை வழங்குவதன் மூலம் விவசாயத்தை வளர்ச்சியின் பாதையில் கொண்டுசெல்ல முடியும்.

விவசாயத் துறையில் கவனம் இல்லாமை, நிர்வாகக் கொள்கைகள், பொருளாதாரக் காரணிகள், கட்டமைப்பு பலவீனங்கள், நிர்வாகப் பலவீனங்கள், தொழில்நுட்ப மற்றும் தனிப்பட்ட நிபுணர்களின் அறிவு இல்லாமை, விவசாய பலவீனம் என பல முடிவுகள் காட்டுகின்றன.

படித்த விவசாயி இல்லையென்றால், வயலில் சரியான நேரத்தில் பயன்படுத்த வேண்டிய இரசாயன உரங்கள் மற்றும் இரசாயன உரங்கள் இல்லாததால் தாவரங்களில் நோய்களை உண்டாக்குவது தொடர்பாகப் போதிய அறிவு விவசாயிக்கு இருக்காது.

கல்வியின் மூலம், விவசாயிகள் தங்கள் பண்ணைகளில் எதிர்கொள்ளும் பூச்சி மற்றும் நோய்கள் போன்ற பிரச்சினைகளுக்குத் தீர்வு காண உதவும் திறன்களைக் கற்றுக்கொள்ளலாம்.

கல்வியின் மூலம், விவசாயிகள் ஒருவரையொருவர் தொடர்பு கொள்ளவும், அவர்கள் செய்வதை எவ்வாறு மேம்படுத்துவது என்பது தொடர்பான யோசனைகளையும், அறிவையும் பகிர்ந்து கொள்ளலாம். விவசாய ஆராய்ச்சி, மற்ற முதலீடுகள் இல்லாமல் கூட வேலை செய்கின்றது.

ஆனால் மற்ற முதலீடுகளை மிகவும் கவர்ச்சிகரமானதாக ஆக்குகின்றது. விவசாய ஆராய்ச்சி வறுமைக் குறைப்புக்கான குறைந்த செலவில் அணுகுமுறையை வழங்குகின்றது.

விவசாயிகளுக்கு வழங்கும் தொழிநுட்ப சேவைகள் தொடர்பாக விரிவாக்க முகவர்களால் அடையாளம் காணப்பட்ட முக்கிய பிரச்சினைகள் வளங்களின் பற்றாக்குறை, மேம்படுத்தப்பட்ட விவசாய தொழில்நுட்பங்கள் பற்றிய மோசமான அறிவு, விவசாயிகளிடையே கல்வியறிவின்மை மற்றும் தகவல் தொடர்பு சிக்கல்கள் காணப்படுகின்றது. விவசாயத்தின் முக்கியத்துவத்தை மிகைப்படுத்த முடியாது.

இது சமூகத்தின் பொருளாதார வளர்ச்சியை அதிகரிக்கின்றது. விவசாயத்தின் வளர்ச்சி, வர்த்தகம் அல்லாத பல நடவடிக்கைகளில் கிராமப்புறத் தொழிலாளர்களின் வேலைவாய்ப்பின் அடிப்படையில் கிட்டத்தட்ட உடனடி தாக்கத்தை ஏற்படுத்துகின்றது.

தொழிநுட்ப மாற்றம் என்பது உலகமயமாக்கலைத் தூண்டும் மிக முக்கியமான காரணியாக இருக்கலாம். விவசாயிகளுக்கும் சமூகத்துக்கும் இடையிலான உறவுகள் பெரும்பாலும் மாற்றங்களின் விளைவாகும்.

விவசாயிகள் பயன்படுத்தும் தொழிநுட்பம் மற்றும் புதிய தொழிநுட்பம் சர்வதேச வர்த்தக மோதல்களில் முன்னணியில் உள்ளது.

தொழிநுட்பங்களை எவ்வாறு கையாள்வது என்ற கேள்வியை ஆராய்வதற்காக இந்தக் கலந்துரையாடல் முயற்சியை மேற்கொள்வது விவசாய முறைகளின் நிலைத்தன்மையை மேம்படுத்தவாகும்.

விவசாய ஆராய்ச்சி, உற்பத்தி தொடர்பான பயிற்சிகளை வழங்குவதற்கும் விவசாயிகளுக்கான தேவையான தொழிநுட்ப மற்றும் நடைமுறை ரீதியான அறிவை வழங்குவதற்கும் பல்கலைக்கழகத்தின் தொழிநுட்ப பீடம் தயாராகவுள்ளது எனத் தெரிவித்துள்ளார்.

இந்நிகழ்வில் துறைத் தலைவர்கள், சிரேஷ்ட விரிவுரையாளர்கள், விரிவுரையாளர்கள், நிர்வாக உயரதிகாரிகள் எனப் பலரும் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

# மீனவர்களைத் தாக்கிய கடற்படை செயற்பாடு: தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கம் கண்டனம்!

கடற்படையினர் மீனவர்களைத் தாக்கிய சம்பவம் கண்டனத்துக்குரியதெனவும், எரிபொருள் பெற்றுக்கொடுக்க அமைச்சர் மற்றும் தமிழ் மக்கள் பிரிதிநிதிகள் ஆர்வம் காட்டாமை தொடர்பிலும் தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கம் விசனம் வெளியிட்டுள்ளது.

கிளிநொச்சி ஊடக மையத்தில் நேற்று (புதன்கிழமை) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவித்த தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் கிளிநொச்சி, யாழ்ப்பாணம், முல்லைத்தீவு மாவட்ட பிரதிநிதிகள் குறிப்பிடுகையில் –

அண்மையில், கிளிநொச்சி நாச்சிக்குடா பகுதியை சேர்ந்த மீனவர்கள் கடற்படையினரால் தாக்கப்பட்டுள்ளனர். அதில் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி வைத்தியசாலையில் சிகிச்சை பெபெற்று நேற்று வீடு திரும்பியுள்ளார்.

குறித்த தாக்குதல் சம்பவத்தை தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கம் வன்மையாகக் கண்டிக்கின்றது. போதைப் பொருள்களைக் கட்டப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்காத கடற்படையினர், இவ்வாறு அப்பாவி மீனவர்கள் மீது தாக்குதல் நடத்துகின்றமை கண்டனத்துக்குரியது.

இன்று நாட்டின் பொருளாதாரம் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், மீனவர்க ளுக்கான மண்ணெண்ணெய் போதுமான அளவு கிடைக்கவில்லை. இந்த நிலையிலும், சில மீனவர்கள் தமது தொழிலை சிரமத்தின் மத்தியில் முன்னெடுத்து வருகின்றனர்.

இந்த நிலையில், கடற்படையினர் இவ்வாறு அவர்களைக் கண்மூடித்தனமாகத் தாக்கியமை பொருத்தமற்றதென்பதுடன், கண்டனத்துக்குரியது.

இவ்வாறான சம்பவங்கள் இனியும் இடம்பெறாதவகையில் உரிய விசாரணை மேற்கொள்ளப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

தாக்கிய கடற்படையினர் இடமாற்றம் செய்யப்பட வேண்டும். மீனவர்கள் மீது தவறுகள் இருப்பின் உரிய விசாரணைகள் மூலம் அது கண்டறியப்பட வேண்டும். இவ்வாறான சம்பவங்கள் இனியும் இடம்பெறக்கூடாது.

எமது நாட்டின் பொருளாதாரத்தை விவசாயமும், கடல் தொழிலுமே பெரும்பாலும் தாங்குகின்றது. இந்த இரண்டுக்கும் மண்ணெண்ணெய் பெற்றுக் கொடுக்கப்படவில்லை. அதற்கு கடற்தொழில் அமைச்சரும், தமிழ் மக்கள் பிரதிநிதிகளும் அக்கறை செலுத்தவில்லை.

இந்த விடயமும் வருத்தத்தை ஏற்படுத்துவதும், அவ்வாறு நடவடிக்கை எடுக்காத அமைச்சர் மற்றும் தமிழ் மக்கள் பிரிதிநிதிகளின் செயற்பாட்டையும் நாங்கள் கண்டிக்கின்றோம்.

விவசாயத்துக்கும், கடற்தொழிலுக்கும் வேண்டிய எரிபொருளைப் பெற்று கொடுக்க வேண்டும்.

அத்துமீறிய மீன்பிடி, மீனவர்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் மீதான தாக்குதல்கள் தொடராது இந்த அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இதுவரை இடம்பெற்ற தாக்குதல் சம்பவங்கள் தொடர்பில் உரிய விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் – என அவர்கள் தெரிவித்துள்ளனர்.




# பலாலியில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்ட பாலத்தை அகற்றக்கோரி மக்கள் போராட்டம்

பலாலி வீதி இரண்டாம் ஒழுங்கையில் தனியார் ஒருவரால், வெள்ள வாய்க்கால் மீது சட்டவிரோதமாக அமைக்கப்பட்ட பாலத்தை அகற்றக்கோரி மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

பலாலி வீதி இரண்டாம் ஒழுங்கையில் மிக நீண்ட வெல்ல வாய்க்கால் ஒன்று காணப்படுகின்றது.

வெள்ள வாய்க்காலில் அப்பகுதியில் உள்ள மக்களின் வீட்டில் இருந்து வெளியேறும் கழிவு நீரை வெளியேற்றாதவாறு மாநகர சபை தடை விதித்துள்ளது. இதன்போது தனியார் ஒருவரால் தனது செல்வாக்கைப் பயன்படுத்தி சட்டவிரோதமாக வெள்ள வாய்க்காலின் மீது பாலம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

வெள்ள வாய்க்காலின் மீது அமைக்கப்பட்ட பாலத்தை யாழ்ப்பாண மாநகரசபை உடனடியாக அகற்ற வேண்டுமென மக்கள் கோரிக்கை முன்வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மட்டு ஊடகவிய......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விசாரணைக்கு வருமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

விசாரணை ஒன்றுக்கான வாக்குமூலத்தைப் பெறுவதற்காக எதிர்வரும் 14ஆம் திகதி வருமாறு அவருக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பில் உள்ள ஊடகவியலாளர் கிருஷ்ண குமாரின் வீட்டுச் சென்று மட்டக்களப்பு பொலிஸ் புலனாய்வு அதிகாரிகள் இந்த அழைப்புக் கடிதத்தை அவரிடம் ஒப்படைத்துள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் பல ஆண்டுகளாக மட்டக்களப்பு மாவட்ட தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் மற்றும் மட்டு. ஊடக அமையத்தின் தலைவர், செயலாளர், பொருளாளர் மீது பயங்கரவாதத் தடுப்பு மற்றும் விசாரணைப் பிரிவு அதிகாரிகள் தொடர்ச்சியாக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதற்கமைய, கடந்த 2018ஆம் ஆண்டு ஊடகவியலாளர் கிருஷ்ணகுமாரிடம் முன்னாள் தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர்களுடன் தொடர்பில் இருந்தார் என்று கூறி கொழும்பில் உள்ள பயங்கரவாதத் தடுப்பு மற்றும் விசாரணைப் பிரிவுக்கு அழைக்கப்பட்டு வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டிருந்தது.

இந்நிலையில், மட்டக்களப்பு மாவட்ட தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் மற்றும் மட்டு. ஊடக அமையத்தின் செயலாளரான செல்வக்குமார் நிலாந்தன், பொருளாளர் புண்ணியமூர்த்தி சசிகரன் ஆகியோர் மீது ஏற்கனவே பல விசாரணைகளை மேற்கொண்டு வரும் மட்டக்களப்பு பொலிஸ் மற்றும் பயங்கரவாதத் தடுப்பு விசாரணைப் பிரிவினர் தற்போது அதன் தலைவரான வாலசிங்கம் கிருஷ்ணகுமார் மீதான விசாரணைகளையும் ஆரம்பித்துள்ளனர்.

## வவுனியா மாவட்டத்தில்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதைக் கட்டுப்படுத்தப் பொலிஸார், பெற்றோர்கள் மற்றும் அரச - தனியார் நிறுவனங்கள் முன்வரவேண்டும்.

- இவ்வாறு தமிழ் விருட்சம் அமைப்பின் தலைவரும் சமூக ஆர்வலருமான எஸ். சந்திரகுமார் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மாணவர்கள் தவறான வழிகளில் சென்றால் அவர்களின் எதிர்காலம் சிதைவடைந்துவிடும். எனவே, பெற்றோர்கள் தமது பிள்ளைகள் மீது அதிக கவனமுடன் செயற்பட வேண்டும்.

இன்றைய நிலைமையில் 16 வயதுக்கு மேற்பட்ட பாடசாலை செல்லும் மாணவர்கள் பல்வேறு போதைப் பொருள் பாவனைக்கு அடிமையாகி வருகின்றனர் . அத்துடன் வவுனியாவில் அண்மைய சில காலமாக போதை ஊசிப் பயன்பாடு அதிகரித்துச் செல்கின்றது.

இவ்வாறான சிலர் அடையாளம் காணப்பட்டு பொலிஸாரின் உதவியுடன் வெலிக்கந்தை புனர்வாழ்வு நிலையத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர். 16 வயதுக்குட்பட்ட பாடசாலை செல்லும் மாணவர்களே அதிகளவில் காணப்படுகின்றனர் .

எனவே, பெற்றோர்கள் தமது பிள்ளைகளில் அதிக கவனம் செலுத்தி அவர்கள் எங்கு செல்கின்றார்கள், யாருடன் பழக்கம் வைத்திருக்கின்றார்கள், எவ்வாறான நிலைமைகளில் வீடு வருகின்றார்கள் என்ற தகவல்களைத் துல்லியமாக அறிந்து வைத்திருக்க வேண்டும் .மாணவர்களுக்கு எவ்வழிகளில் போதை ஊசி வழங்கப்படுகின்றன, இவை யாரால் எங்கிருந்து விநியோகம்செய்யப்படுகின்றன போன்ற கேள்விகளுக்கான பதில்கள் பொலிஸாரால் கண்டறியப்பட வேண்டும் - என்றார்.

## கொழும்பில் மோதல்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொலிஸார் தெரிவித்துள்ளனர். தனிப்பட்ட தகராறு காரணமாக இந்த மோதல் ஏற்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கொழும்பு - 12 பகுதியைச் சேர்ந்த 43 வயதான நபரே இந்தச் சம்பவத்தில் உயிரிழந்துள்ளார்.

படுகாயமடைந்த பெண் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர்கள் பிரதேசத்தை விட்டுத் தப்பிச் சென்றுள்ளனர் என்று பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.

## கைதான......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த ஜூலை மாதம், ஜனாதிபதி செயலகத்துக்குள் நுழைந்து அதன் சொத்துக்களைச் சேதப்படுத்திய குற்றச்சாட்டின் பேரில் அவர் கைதுசெய்யப்பட்டார்.

நேற்று பத்தரமுல்லை தியத்த உயனேயில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டபோது தமித்தா அபேரத்ன, கொழும்பு வடக்கு குற்றத் தடுப்புப் பிரிவின் விசாரணைப் பிரிவினரால் கைது செய்யப்பட்டார்.

## படையினரால்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குமாரசுவாமிக்குத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி நாடாளுமன்றத்தில் அஞ்சலி செலுத்தியது.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற பிள்ளைகள், தாய்மாரின் மந்தபோசணை தொடர்பாக யுனிசெப் நிறுவனம் விடுத்திருக்கும் அறிக்கை மீதான சபை ஒத்திவைப்பு வேளை இரண்டாவது நாள் விவாதத்தில் உரையாற்றிய தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் அஞ்சலியைச் செலுத்தினார்.

யாழ்ப்பாணம் செம்மணியில் இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்ட மாணவி கிருஷாந்தி குமாரசுவாமியின் 26 ஆவது ஆண்டு நினைவு தினம் நேற்று வடக்கு, கிழக்கில் கடைப்பிடிக்கப்பட்டது.

1996ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 7 ஆம் திகதி யாழ். சுண்டிக்குளி மகளிர் கல்லூரி மாணவி கிருஷாந்தி செம்மணிப் பகுதியில் வைத்து இராணுவத்தினரால் கூட்டுப் பாலியல் வன்புணர்வுக்குட்படுத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்டார். அவரைத் தேடிச் சென்றவர்களும் இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்டுப் புதைக்கப்பட்டனர். கிருஷாந்தியையும் அவரைத் தேடிச் சென்ற நிலையில் படுகொலை செய்யப்பட்ட மாணவியின் உறவினர்களையும் நினைவு கூர்ந்து நேற்று அஞ்சலி நிகழ்வுகள் நடைபெற்றன.









இந்நாளிதழ் யாழ்ப்பாணம், இல-551A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 08.09.2022இல் வெளியிடப்பெற்றது.